# கெக்கிராவ பிரதேச சபை

# அநுராதபுர மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 20 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுக்களாவை 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கெக்கிராவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 717,428 பெறுமதியான 648 கல்வணயிஸ் குழாய்களை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 224,310 இற்கான நூலகப் புத்தகங்களின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டியிருந்த ரூபா 328,028 இற்கான தொகை ஒன்ற பொது வழங்கள் கடன்கொடுத்தோரின் கீழ் மற்றும் சபை நிதியக் கடன்கொடுத்தோரின் கீழ் இரண்டு முறை கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் கடன்கொடுத்தோர் மற்றும் பற்றாக்குறை அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை ரூபா 9,712,359 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 4,080,023 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

----------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 3,174,272 ஆக காணப்பட்ட நிலுவை வருமானத்தில் நீண்ட காலமாகக் காணப்பட்ட நிலுவை மீதியும் காணப்பட்டதுடன் இந்த நிலுவை அறவீடு செய்வதற்காக சபையினால் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | நிலுவைத் தொகை |
|---|---|
| | ரூபா. |
| வீதவரி | 1,955,917 |
| கேள்வி மூலம் வாடகை (இறைச்சிக் கடை, மீன் கடை கட்டணம்) | 532,065 |
| களியாட்ட வரி | 572,988 |
| வர்த்தக நிலையங்களும் கடைகளும் | 113,302 |
| | 3,174,272 |

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------------

(அ) கெக்கிராவ மாவட்ட/ நீதிவான் நீதி மன்றங்களில் இருந்து பிரதேச சபைக்காக சேகரிக்கப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான ரூபா 17,055,210 வும் மற்றும் முன்னைய ஆண்டிற்கான ரூபா 33,183,448 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் இது வரை சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2012, 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் அறுதியாக இனங்கண்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டு / முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------------------------------

(அ) ரூபா 42,436,566 இற்கான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதியில் வருடம் 1-5 இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,255,333 இற்கான மீதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதியில் வருடம் 1-5 இடைப்பட்ட காலம் முதல் செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,126,546 இற்கான மீதி ஒன்று காணப்பட்டது. அம் மீதியில் நிர்மாண வேலை பிடித்து வைத்தல் பணம் என இனங்காணக் கூடிய மீதி ஒன்றும் காணப்பட்டது. இந்த கடன்கொடுத்தொர் மீதியை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் தொடர்பாக சபைக்க கிடைத்திருந்த ரூபா 2,000,000 இற்கான பெறுமதிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்காக சபைக்கு இயலாமை காரணமாக அப் பணத்தில் இருந்து ரூபா 1,143,489 இற்கான தொகையொன்று 2015 ஆண்டின் போது திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது மின் துணைக் கருவிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 322,575 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அக் கருவிகளின் தற்போதைய விலைகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட போது ரூபா 80,425 தொகை ஒன்று மிகையாக செலுத்தப்பட்டுள்ளது.

3.3 பயன்படுத்தப்படாத/ குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான கூட்டுத் தொகை ரூபா 2,690,329 தொகை பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாமையின் காரணமாக பயனற்றதாக காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு